

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## சிறுபான்மையினர் நலன்

### மானியக் கோரிக்கை எண். 9

அறிவிப்புகள்

2023–2024

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# சிறுபான்மையினர் நலன்

## மானியக் கோரிக்கை எண். 9

## அறிவிப்புகள்
## 2023–2024


**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**

சிறுபான்மையினர் நலன் மற்றும்

வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

1. ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மையினருக்கு 2500 விலையில்லா மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக ஒரு தையல் இயந்திரம் ரூ.6400 மதிப்பில் 2500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூ. 20,000-லிருந்து ரூ. 30,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் செயல்படும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூ.20,000-லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்தப்படும்.

**3. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களின் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு 1000 ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.**

சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் செயல்படும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களின் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு 1000 ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

**4. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு விபத்து மரணத்திற்கான உதவித்தொகை ரூ.1,00,000/-லிருந்து ரூ.1,25,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் செயல்படும் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விபத்து மரணத்திற்கான உதவித் தொகை ரூ.1,00,000/-லிருந்து ரூ.1,25,000/- ஆக உயர்த்தப்படும்.

**5. சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 81 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் 2 புதிய சிறுபான்மையினர் கல்லூரி மாணவர் விடுதிகள் துவங்கப்படும்**

சிறுபான்மையின மாணவர்களின் நலன் கருதி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 2 புதிய சிறுபான்மையினர் கல்லூரி மாணவர் விடுதிகள் 81 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும்.

**6. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் புதிதாக சுற்றுச்சுவர் அமைக்கப்படும் மற்றும் புனரமைக்கப்படும்.**

தமிழகத்தில் உள்ள கிறித்தவர் மற்றும் இஸ்லாமியர் சமுதாயத்தினர் இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடமான கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் புதிதாக சுற்றுச்சுவர், பாதை மற்றும் புனரமைப்பு செய்யப்படும்.

**7. சொந்தக் கட்டடத்தில் இயங்கும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ள 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

சொந்தக் கட்டடத்தில் இயங்கும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு 1 கோடி ரூபாய் செலவில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8. சென்னை மாவட்டம் இராயப்பேட்டையில் ஒரு சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதிக்கு 6 கோடியே 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, சென்னை மாவட்டத்தில் உள்ள இராயப்பேட்டை சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கு 6 கோடியே 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

**9. கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவி சங்கம் 2 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவங்கப்படும்.**

கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவி சங்கம் 2 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவங்கப்படும்.

## 10. கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் மூலம் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

கல்லூரி மாணவர்கள் மொழி, பண்பாடு, இலக்கியம், கலைகள், வரலாறு ஆகியவற்றின் புரிதல்களை பெற்றிடும் வகையில் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் மூலம் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.

**11. அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும் சிறுபான்மையினர் உரிமைகள் தினத்திற்கு வழங்கப்பட்டு வரும் தொகை ரூ.2,000/- லிருந்து ரூ.10,000/- ஆக 3 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.**

அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படும் சிறுபான்மையினர் உரிமைகள் தினத்திற்கான தொகை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.2,000/-லிருந்து ரூ.10,000/- ஆக உயர்த்தப்படும். இதற்கென 3 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

**12. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காகவும் (Survey) 11 மண்டல அலுவலகங்களில் 11 கணினிகள் மற்றும் 11 ஸ்கேனர்களுடன் கூடிய நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காகவும் (Survey) மற்றும் 11 மண்டல அலுவலகங்களில் 11 கணினிகள் மற்றும் 11 ஸ்கேனர்களுடன் கூடிய நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்கவும் 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.